7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

45. சென்னையில் உள்ள இந்திய மாநில வர்த்தகக் கழகத்தின் மூலம் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை வாங்க தமிழ்நாடு காவல் துறை இயக்குநருக்கு 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)-ன்கீழ், அனுமதி அளித்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 4-5-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 132-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

46. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல், 2016 தொடர்பாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு வாக்குப்பதிவு நாளன்று (16-5-2016) குறுந்தகவல் சேவை அடிப்படையிலான வாக்குப்பதிவு கண்காணிப்பு அமைப்பு உள்ளடக்கிய குறுந்தகவல் சேவை நுழைவாயில் அமைக்கும் பணிகள் மற்றும் வாக்கு எண்ணிக்கை நாளான 19-5-2016 அன்று வாக்குகள் எண்ணப்படும் நடைமுறைகளைக் கண்காணிக்க தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கு நொடிக்கு 20 மெகா பிட்ஸ் திறனுடைய இணையதள கம்பி வட வசதி அமைக்கும் பணிகளை திருவாளர்கள் பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்க 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)-ன்கீழ், அனுமதி அளித்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 4-5-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 133-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

47. மாநில அரசுத் துறைகள், மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு துணி நூல் கழகத்திடமிருந்து துணிகளை வாங்க 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)-ன்கீழ், அனுமதி அளித்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 4-5-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 134-ல் வெளியிடப்பட்ட

2016 ஆகஸ்ட் 29]

அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

48. தமிழ்நாட்டில் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் குளிர்பதன சங்கிலி மற்றும் விற்பனை முனையங்கள் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை நபார்டு கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் நிறுவனத்திடம் (NABCONS) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)-ன்கீழ், ஒப்படைத்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 26-5-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 149-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

49. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 11-7-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 101-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

50. திருநெல்வேலி மாவட்டம், பத்தமடையில் உள்ள திருவாளர்கள் சுவாமி சிவானந்தா நூற்றாண்டு விழா மருத்துவமனைக்கு, யாதொரு வணிகரால், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்களின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு விலக்களித்தது குறித்து வணிகவரி மற்றும் பதிவு (பி2) துறையின் 20-7-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 105-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

51. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டம் 323 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)